පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව
වෙත යොමු කරන ලද
**2023 වර්ෂයේ ශ්‍රී ලංකා තේ මණ්ඩලයේ වාර්ෂික වාර්තාව**
**2023 වර්ෂයේ කුඩා තේ වතු සංවර්ධන අධිකාරියේ වාර්ෂික වාර්තාව**
**2022 වර්ෂයේ පොල් වගාකිරීමේ මණ්ඩලයේ වාර්ෂික වාර්තාව**
**2021 වර්ෂයේ පොල් වගාකිරීමේ මණ්ඩලයේ වාර්ෂික වාර්තාව**
සම්බන්ධයෙන්
පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ
පරිසරය, කෘෂිකර්මය සහ සම්පත් තිරසාරත්වය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති
ගරු හෙක්ටර් අප්පුහාමි මහතා, පා.ම. විසිනි
**2025 නොවැම්බර් මස 17 වැනි සඳුදා**

-----------------------------------------------------------

**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட**
**2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கை**
**2023 ஆம் ஆண்டுக்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை**
**2022 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை**
**2021 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை**
**மீதான**
**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை**
**சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**
**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ, அவர்களால்**
**2025 நவம்பர் 17 ஆம் திகதி திங்கட்கிழமை**
**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

-----------------------------------------------------------

**Report of the**
**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability**
**on**
**Annual Report of the Sri Lanka Tea Board for the year 2023**
**Annual Report of the Tea Small Holdings Development Authority for the year 2023**
**Annual Report of the Coconut Cultivation Board for the year 2022**
**Annual Report of the Coconut Cultivation Board for the year 2021**
**Referred to**

**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability**

**Presented to Parliament by**
**Hon. Hector Appuhamy, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Environment, Agriculture and Resource Sustainability on**

**Monday 17 November 2025**

## குழுவின் அறிக்கை

2025 ஆகஸ்ட் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றி துறைசார் மேற்பார்வைக் குழு கீழ்க் காணும் வருடாந்த அறிக்கைகளை ஆராய்ந்தது.

- 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கை (2025.05.08 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)
- 2023 ஆம் ஆண்டுக்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை (2025.06.30 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)
- 2022 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை (2025.05.09 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)
- 2021 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை (2024.04.01 ஆந் திகதி சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு, 2025.05.02 ஆந் திகதி நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி பத்தாவது பாராளுமன்றத்தின் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றி துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது)

**பங்குபற்றிய குழு உறுப்பினர்கள்**

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ., (தவிசாளர்)
கௌரவ கிங்ஸ் நெல்சன், பா.உ.,
கௌரவ உபுல் கித்சிறி, பா.உ.,
கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, பா.உ.,
கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.,

திருமதி சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), குழுவின் செயலாளர்

**பங்குபற்றிய அதிகாரிகள்**

**பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

திருமதி எச்.என்.எஸ்.டி.கே. டி சில்வா, மேலதிக செயலாளர்
திரு. டபிள்யூ.டபிள்யூ.கே. விதானகே, பணிப்பாளர், உட்பட ஏனைய அலுவலர்கள்

**இலங்கை தேயிலை சபை**

திரு. ஆர்.கே. ஒபேசேகர, தலைவர்
திரு. மகேஷ் ஜெயவர்தன, தேயிலை ஆணையாளர், உட்பட ஏனைய அலுவலர்கள்

**சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை**

திரு. நிமல் உடுகம்பொல, தலைவர்
திரு. ஜே.எம்.கே.பி. விக்ரமசிங்கே, பொது முகாமையாளர், உட்பட ஏனைய அலுவலர்கள்

**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை**

திரு. ஜே.ஏ.டி.ஜே.எஸ்.கே. ஜெயகொடி, தலைவர்
திரு. எம். ஜெயநாமா, பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவம்), உட்பட ஏனைய அலுவலர்கள்

மேற்படி அனைத்து அறிக்கைகள் தொடர்பாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டதோடு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனுக்காகவும் ஒட்டுமொத்த மக்களின் நன்மைக்காகவும் குறித்த நிறுவனங்கள் செயலாற்றுவதற்கான ஆலோசனைகள் மற்றும் விதப்புரைகள் குழுவினால் வழங்கப்பட்டதோடு, அந்த அறிக்கைகளில் கணிசமான குறைபாடுகள் காணப்படாமையினால், அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குழு தீர்மானித்தது.

**குழுவின் தீர்மானங்கள்**

பரிசீலனையின் பின்னர், சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்படி வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளுக்கு குழு இணக்கம் தெரிவித்துடன், அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களால் 2025 நவம்பர் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.